பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**28 12 2025 SUNDAY 7.15 PM**

ஆகாஷவாணி

# தலைப்புச் செய்திகள்

1. கடற்படையின் திறனை **INS Vaghsheer** போர் கப்பல் எடுத்துரைப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

2. பிரதமரின் இல்லந்தோறும் சூரியசக்தி திட்டத்தின்கீழ், 25 லட்சம் வீடுகள் பயனடைந்திருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

3. சுகாதாரத்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

4. இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்படுவதை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக அரசு வலியுறுத்தியுள்ளது.

5. தேசிய பேட்மிண்டன் போட்டியில் தமிழகத்தின் **Ritvik Sanjeevi** பட்டம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>

கடற்படையின் திறனை **INS Vaghsheer** போர் கப்பல் எடுத்துரைப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

கர்நாடகா மாநிலம் **Karwar** கடற்படை தளத்திலிருந்து இந்த போர் கப்பலில் பயணித்த பின்னர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட இந்த நீர்முழ்கி கப்பல், பல்வேறு சிறப்புகளை கொண்டுள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

கடல்சார் பாதுகாப்பு தொடர்பான அனைத்து அம்சங்கள் குறித்தும் குடியரசுத் தலைவரிடம் கடற்படை அதிகாரிகள் எடுத்துரைத்தனர்.

<<<<<>>>>>

பிரதமரின் இல்லந்தோறும் சூரியசக்தி திட்டத்தின்கீழ், **25** லட்சம் வீடுகள் பயனடைந்திருப்பதாக மத்திய அரசு கூறியுள்ளது.

தூய எரிசக்தி பயன்பாட்டில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதை இது எடுத்துரைப்பதாக உள்ளது என்று புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நீடித்த வளர்ச்சிக்கு இந்த திட்டம் உதவிகரமாக உள்ளது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

சுகாதாரத்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு கூடுதல் முக்கியத்துவம் அளித்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர். எல். முருகன் கூறியுள்ளார்.

தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் உள்ள எடப்பள்ளி சித்தகிரி சாய் மருத்துவமனையில் பெண்களுக்கான நடமாடும் புற்றுநோய் பரிசோதனை வசதியை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

நீலகிரி மாவட்டத்தை சேர்ந்த ஒன்றரை லட்சம் பெண்கள் இதன்மூலம் பயனடைவார்கள் என்று அவர் கூறினார்.

இந்திய நிலக்கரி நிறுவனத்தின் சமூக பொறுப்புணர்வு நிதி திட்டத்தின்கீழ், இந்த மருத்துவ சேவை வாகனம் வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தமிழகத்தின் வளர்ச்சியில் பிரதமர் தனிகவனம் செலுத்தி வருவதாகவும் டாக்டர் எல். முருகன் கூறினார்.

<<<<<>>>>>

உத்தரப்பிரதேசத்தில் உள்ள **Parvati — Arga** பறவைகள் சரணாலயத்தை பாதுகாக்கப்பட்ட சூழல் மண்டலமாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங், சமூக வலைதளத்தில் இதனை தெரிவித்துள்ளார்.

பல்லுயிர் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் மத்திய அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த சரணாலயம் ஆயிரத்து **84** ஹெக்டேர் பரப்பளவை கொண்டுள்ளதாகவும் திரு கீர்த்தி வர்தன் சிங் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

தரவு பாதுகாப்பு வாரியத்திற்கான உறுப்பினர்களை நியமிப்பதற்கான நடைமுறைகள் தொடங்கியுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த தகவல் தொழில்நுட்பத்துறை செயலர் திரு எஸ். கிருஷ்ணன், இணையதளம் வாயிலாக இந்த வாரியத்தின் செயல்பாடுகள் இருக்கும் என்று குறிப்பிட்டார்.

இதுகுறித்து தொடர் ஆலோசனைகள் நடைபெற்று வருவதாகவும் திரு கிருஷ்ணன் கூறினார்.

<<<<<>>>>>

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்படுவதை தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு இன்று எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த மீனவர்கள் மூன்று பேரை இலங்கை கடற்படையினர் இன்று சிறைபிடித்துள்ளதை அவர் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மீனவர்கள் மற்றும் மீன்பிடி படகுகளை விடுவிக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தற்போதைய நிலவரப்படி தமிழகத்தை சேர்ந்த **61** மீனவர்களும், **248** மீன்பிடி படகுகளும், இலங்கை அதிகாரிகளின் காவலில் உள்ளதாக முதலமைச்சர் அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

மக்களின் குரலாக காங்கிரஸ் செயல்படுகிறது என்று அக்கட்சியின் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி கூறியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் நிறுவன தினத்தையொட்டி புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

அரசியல் சாசனத்தை பாதுகாக்க காங்ரஸ் உறுதியுடன் பணியாற்றும் என்றும் திரு ராகுல்காந்தி தெரிவித்தார்.

<<<<<>>>>>

இனி, நடப்பாண்டில் மத்திய அரசின் சாதனைகள் குறித்த தொகுப்பு.

**(Opening Tune — 20 Sec.)**

இதில் இன்று இடம்பெறுகிறது, கட்டமைப்புத் துறையின் வளர்ச்சிக்காக படைக்கப்பட்ட சாதனைகள்.

**(Closing Tune — 15 Sec.)**

<<<<<>>>>>

ஒடிஷாவில் வாக்களார் பட்டியல் தயாரிப்புப் பணிகள் குறித்து தலைமை தேர்தல் ஆணையர் திரு கியானேஷ்குமார் ஆய்வு மேற்கொண்டு வருகிறார்.

புவனேஷ்வரில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுடன் இதுகுறித்து நாளை அவர் ஆய்வு மேற்கொள்ள உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனைத்தொடர்ந்து அம்மாநில தேர்தல் அதிகாரியுடனும் அவர் ஆலோசனை மேற்கொள்கிறார்.

<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரில் நடைபெற்ற ஒற்றுமை பேரணியில் எட்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

காவல்துறை சார்பில் ஜம்முவில் நடைபெற்ற இந்த பேரணியில் எட்டு முதல் **80** வயதை சேர்ந்தவர்கள் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

குஜராத்தில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர். **26** பேர் காயமடைந்தனர்.

**Botad** அருகே சென்று கொண்டிருந்த மினி வேன் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து கவிழ்ந்ததில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<<>>>>>

ஸ்வீடனில் வீசிய பனிப்புயல் காரணமாக இரண்டு பேர் உயிரிழந்தனர்.

இந்த பனிப்புயலால் அந்நாட்டில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகவும், பல்வேறு பகுதிகளில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமான சேவையும் பாதிக்கப்பட்டிருப்பதாக அந்நாட்டு அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நார்வே, பின்லாந்து ஆகிய நாடுகளிலும் பனிப்புயல் காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

தேசிய பேட்மிண்டன் சாம்பியன் போட்டியில் தமிழகத்தின் **Ritvik Sanjeevi** பட்டம் வென்றார்.

விஜயவாடாவில் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், **21-16, 22-20** என்ற செட் கணக்கில் ஹரியானாவின் பரத் ராக-வை வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் ஆந்திராவின் **Surya Charishma Tamiri**-யும், ஆடவர் இரட்டையர் பிரிவில் தமிழகத்தின் ஹரிஹரன் - ரூபன் குமார் இணையும் பட்டம் வென்றன.

**<<<<<END>>>>>**